**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.14/2025**

**06.03.2026**

**P.W.1- ரகுராமன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

கட்டத்தேவன்பட்டியில் கிழக்கு தெருவில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி மேற்படி ஊரின் காலனியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பிராதில் கண்ட சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். பிரதிவாதி வங்கியில் நகை மதிப்பீட்டாளராக உள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி ஐசிஐசிஐ வங்கியில் 2023ம் ஆண்டு வரை நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான், ஆண்டு ஞாபகமில்லை. மேற்படி வங்கியின் நான் நகையை அடகு வைத்தேன் என்றால் சரியல்ல. உசிலம்பட்டி, கனரா வங்கியில் எனக்கு சேமிப்பு கணக்கு உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 12.07.2023ம் தேதி உசிலம்பட்டி, கனரா வங்கியில் என்னால் நகை அடகு வைக்கப்பட்டதற்கான சீட்டு என்றால் சரிதான். மேற்படி அடகு சீட்டு ஒளிநகல் பி.வா.ச.ஆ.1. என்னிடம் காட்டப்படும் புகார் நகல் பிரதிவாதியின் மீது என்னால் 29.01.2024ம் தேதி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு என்றால் சரிதான். மேற்படி புகார் மனு நகல் பி.வா.சா.ஆ.2. என்னிடம் காட்டப்படுவது மேற்படி புகார் விசாரணையில் என்னால் எழுதிக்கொடுக்கப்பட்ட வாக்குமூலம் நகல் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலம் நகல் பி.வா.சா.ஆ.3. என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கடந்த 27.03.2024ம் தேதி மாவட்ட குற்றப்பிரிவில் பிரதிவாதியின் மீது கொடுக்கப்பட்டது புகார் மனு என்றால் சரிதான். மேற்படி புகார் மனு நகல் பி.வா.சா.ஆ.4. என்னிடம் காட்டப்படும் புகார் மனு பிரதிவாதியால், காவல்துறை துணைத்தலைவர் அவர்களிடம் கடந்த 09.10.2023ம் தேதி பிரதிவாதி வேலை பார்த்த ஐசிஐசிஐ வங்கி, கிளை மேலாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் சதீஸ் ஆகியோர் மீது கொடுத்த புகார் என்றால் சரிதான். நானும், பிரதிவாதியும் சேர்ந்து தான் மேற்படி புகார் மனுவினை கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி புகார் மனு நகல் பி.வா.சா.ஆ.5. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி புரோநோட்டு

சம்மந்தமாக பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எனக்கு G Pay (9994818406) கணக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கணக்கில் பிரதிவாதி 2021-லிருந்து எனக்கு பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். நான் மேற்கண்ட புகார்களில் பாலசுப்பிரமணியம் பவுனுக்கு ரூ.300 கிடைக்கும் என்ற சொன்னதன் பேரில் பிரதிவாதி மூலமாக எங்களது நகைகளை அடகு வைத்து நம்பி ஏமாந்துவிட்டோம் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பாலசுப்பிரமணியம் சொல்லவில்லை, பிரதிவாதி சொல்லித்தான் பிரதிவாதியிடம் நகைகளை அடகு வைக்க கொடுத்தோம். பிரதிவாதி அவரது பெயரில் எந்த நகையையும் அடகு வைக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. தற்போது மேற்படி நகைகள் திருப்பப்பட்டு என் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி திருப்பி தரவில்லை, நான் தான் திருப்பினேன். எனது பெயரிலிருந்த அடமான நகைகளை நான் திருப்பினேன் என்றால் எனது பெயரில் இல்லை. வங்கியின் விதிப்படி யார் பெயரில் நகைகள் அடமானத்தில் உள்ளதோ, அவர் தான் திருப்ப முடியும் என்றால் சரிதான். பிரதிவாதி நகை மதிப்பீட்டாளர் என்பதாலும், உள்ளூர்காரர் என்பதாலும் வாடிக்கையாளர்களுக்கு நகையை அடகு வைக்க உதவி செய்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதியும், நானும் உறவுமுறை இல்லை. ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவோம். நான் எம்.எஸ்.சி., பி.எட்., படித்துள்ளேன். நான் ஆசிரியராக பணிபுரியவில்லை. நான் கட்டிடம் கட்டும் வேலை பார்க்கிறேன். நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை. பொதுவாக ஒருவருக்கு ரூ.2 லட்சம் பணம் கொடுக்க வேண்டுமென்றால் வங்கி கணக்கு மூலம் தான் கொடுக்க வேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியாது. நான் கட்டிடம் கட்டும் நிறுவனம் வைத்திருப்பதால் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டை என் வீட்டில் வைத்து எழுதியதாக சொல்லியுள்ளேன். ரூ.7 லட்சம் பணம் கொடுப்பதற்கு எனக்கு வசதி உள்ளதா என்றால் 2021ல் நவம்பர் மாதம் நான் எனது மகன்கள் ரக்ஷன், யஜ்வான் காதனி விழா வைத்தேன். அதில் கிடைத்த பணத்தை கொடுத்தேன். காதனி விழாவில் கிடைத்த

பணத்தை கொடுத்தேன் என பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பணம் வாங்குவதற்கு முன்பு எந்த தேதியில் பிரதிவாதி கேட்டார் என பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி மீது பணம் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக புகார் கொடுத்து, நிலுவையில் இருக்கும்போது மறுபடியும் பிரதிவாதிக்கு தாவா புரோநோட்டில் கண்ட 2022ம் வருடத்தில் ரூ.7 லட்சம் கடனாக கொடுத்திருப்பதாக கூறியுள்ளது ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது இல்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டு சட்டவிரோதமாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது கொடுத்த புகாரில் எனது மனைவியின் 23 பவுன் தங்க நகைகளும், ரூ.25,000ம் நான் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேன் என்றும், அதை பெற்றுத்தருமாறு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாருக்கும், தாவா புரோநோட்டுக்கும் தொடர்பு இல்லை. தாவா புரோநோட்டு எழுதப்பட்டது ஆகும். பிரதிவாதி அழைத்து வந்த செந்தில்குமார் என்பவர் எழுதினார். தாவா புரோநோட்டை பிரதிவாதியும், செந்தில்குமாரும் எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி சொன்னபடி மேலாளர் பாலசுப்பிரமணியம் பவுனுக்கு ரூ.300 வீதம் கொடுத்த பணத்தை எனது நகைக்காக எனது G Pay யில் செலுத்தினார் என்றால் சரியல்ல. முறையாக வழக்கறிஞர் அறிவுப்பு அனுப்பியிருந்தால் பிரதிவாதி உண்மையை கூறிவிடுவார் என்பதால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரிலுள்ளது. பிரதிவாதியின் உடன்பிறந்தவர்கள் 5 நபர்கள் என்றால் தெரியாது. மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்து காலனி வீட்டின் சொத்து என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் இருந்ததால் பொறுப்பிற்காக கொடுத்தார். மேற்படி ஆவணம் பழக்கத்தின் அடிப்படையில் வங்கி மேலாளர் பாலசுப்பிரமணியம் பணம் கொடுக்கும்வரையிலும், நகையை திரும்பித் தரும்வரையிலும் உத்தரவாதமாக கொடுத்த பத்திரத்தை வைத்து புரோநோட்டுடன் கொடுத்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியிருந்தால் பிரதிவாதியின் பெயரிலுள்ள சொத்திற்கான ஆவணத்தை வாங்கியிருப்பேன் என்றால் மேற்படி ஆவணம் மட்டும் இருந்ததால் கொடுத்தார். மேற்படி ஆவணத்துடன் கடன் வாங்கியிருந்தால் உடன் பிறந்தவர்களிடம் கையெழுத்து பெற்றிருப்பேன் என்றாலும், நான் சொல்வது போன்று கடன் எதுவும் கொடுக்காததால்தான் அவ்வாறு கையெழுத்து எதுவும் வாங்காமல் புரோநோட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு புரோநோட்டின் மூலம் எந்தவித பண பரிமாற்றமும் (consideration) இல்லை என்பதாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.06 15:20:36 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.